2005 செப்டம்பர் 23]

தலைமையில் நடைபெற்று வருகின்ற இந்த நல்லாட்சியில் எனது பத்மநாபபுரம் சட்டமன்றத் தொகுதியில் உதயகிரி கோட்டையைப் பழுது பார்த்து, புனரமைக்க ரூபாய் 20 இலட்சம் ஒதுக்கீடு செய்து தந்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எனது தொகுதி மக்கள் சார்பாக நன்றியினைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், எனது தொகுதியில் பழுதடைந்து மிகவும் மோசமாக இருந்து வரும் வரலாற்றுச் சிறப்பு மிக்க பத்மநாபபுரம் கோட்டையைப் பழுது பார்க்கும் பணி ஆய்வில் உள்ளது என்று அறிவித்ததற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் மீண்டும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, அரசின் ஏதாவது ஒரு சிறப்புத் திட்டத்தின்கீழ் மேற்படி பணியினை விரைந்து அரசு செயல்படுத்துமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11–25

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை அரசு சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 35, திரு. ஆர்.டி. கணேசன், மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.*

35—

அரசு தொழில்நுட்பக் கல்லூரி

***22532—திரு. ஆர்.டி. கணேசன்:**

மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேனியில் அரசு தொழில்நுட்பக் கல்லூரி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) தேனியிலே ஒரு அரசு தொழில்நுட்பக் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

திரு. ஆர்.டி. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் தங்கத் தாரகை அம்மா அவர்களை வணங்கி, இந்தியாவில் தமிழகத்தை முதன்மை மாநிலமாக மாற்றி வரும் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில், விவசாயிகளுக்குக் கரும்புக்கு டன் ஒன்றுக்கு குறைந்தபட்சம் 1,014 ரூபாய் வழங்கியதற்கும், விவசாயிகள் கூட்டுறவுக் கடன்கள் பெற்றதில் 2006 வரை வட்டி, அபராத வட்டிகளைத் தள்ளுபடி செய்தமைக்கும், விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் சிறு குறு விவசாயிகளுக்கு உழவர் பாதுகாப்புத் திட்டம் கொண்டு வந்தமைக்கும் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு மாவட்டத்திலுள்ள அனைத்து விவசாயிகளின் சார்பில் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தில் மிகவும் பின்தங்கிய மாவட்டமான தேனி மாவட்டத்தை முன்னோடி மாவட்டமாகவும், மாண்புமிகு அம்மா அவர்களின் தொகுதியான ஆண்டிப்பட்டியை இந்தியாவின் முதன்மைச் சட்டமன்றத் தொகுதியாகவும் மாற்றிய மாண்புமிகு அம்மா அவர்கள், தேனியில் அரசு மருத்துவமனை மருத்துவக் கல்லூரியும், அரசு கலைக் கல்லூரியும் அமைத்தும், பெண்களுக்கான தொழிற்பயிற்சி நிலையம் அமைத்தும், மாவட்ட விளையாட்டு அரங்கம், மாவட்ட நீதிமன்றக் கட்டடம், மகளிர் தொழிற்பயிற்சி நிலையம், மகளிர் குழுக்களுக்குப் பல்வேறு நலத் திட்டங்கள் வழங்கியும், அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சிப் பணிகளைத் துரிதமாக செய்து முடித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு மாவட்ட மக்களின் சார்பில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தேனி தொகுதியில் 1978–ல் தொடங்கப்பட்ட தந்தைப் பெரியார் வாய்க்கால் மற்றும் பி.டி.ஆர். வாய்க்கால் திட்டத்தில் சென்ற வருடம் வரையிலும் வருடந்தோறும் செப்டம்பர் 15–ல் திறக்கின்ற தண்ணீரினை இந்த வருடம் 23 நாட்களுக்கு முன்னதாக விவசாயப் பொது மக்களின் கோரிக்கையினை ஏற்று, 22–08–2005 அன்று திறந்து, சுமார் 5,126 ஏக்கர் விவசாய நிலத்திற்கு தண்ணீர் பாய்ச்சுகின்ற நிலையினை ஏற்படுத்திக் கொடுத்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு தொகுதி மக்களின் சார்பில் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மிகவும் பின்தங்கிய மாவட்டமான தேனி மாவட்டத்திலுள்ள மாணவ, மாணவிகள் அரசு தொழில்நுட்பக் கல்லூரியில் பயில்வதற்கு மதுரை சென்று பயிலுகின்ற சூழ்நிலையினை மாற்ற, மாண்புமிகு அம்மா அவர்களின் மாவட்டமான தேனி மாவட்டத்தில் அரசு தொழில்நுட்பக் கல்லூரி அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2005 செப்டம்பர் 23]

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே தற்போது 239 தொழில்நுட்பக் கல்லூரிகள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. அதிலே கிட்டத்தட்ட 80 ஆயிரம் ஒப்பளிக்கப்பட்ட இடங்கள் இருக்கின்றன. இந்த ஆண்டு நடைபெற்ற அந்தப் பொறியியல் கல்லூரி மாணவர்கள் சேர்க்கையிலே, ஒற்றைச் சாளர முறையில் தேர்வு நடைபெற்றதற்குப் பிறகு 11,051 காலி இடங்கள் இருக்கின்றன. தனியார் கல்லூரிகளிலே அந்த Management Quota–விலே தற்போது 6 ஆயிரம் இடங்கள் காலியாக இருக்கின்றன. அதுமட்டுமல்ல; தேனி மாவட்டத்திற்கு ஒப்பளிக்கப்பட்ட அந்த மாணவர் சேர்க்கையிலே இருக்கின்ற மொத்த இடங்கள் 420. இதுவரை சென்ற ஆண்டு சேர்க்கையிலே, 420 இடங்களிலே 285 இடங்கள் காலியாக இருக்கின்றன. இப்படிப்பட்ட நிலையிலே ஒரு கல்லூரி ஆரம்பிக்கவேண்டும் என்றால், நிலம் நீங்கலாக 10 கோடி ரூபாய் மதிப்பீடு இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், இந்த ஆண்டு இப்போது 5,000 கூடுதலான இடங்களை இன்றைக்கு A.I.C.T.E. ஒதுக்கியிருக்கின்றது. ஆகமொத்தம், 23 ஆயிரம் இடங்கள் இந்த ஆண்டு மட்டும் காலியிடங்களாக தற்போது இருக்கின்ற நிலையிலே, புதியதாக தொழில்நுட்பக் கல்லூரி ஆரம்பிக்கின்ற வினா எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 36, திரு. எஸ். நடராஜன், மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

36—

பால் கூட்டுறவுச் சங்கம்

***41486—திரு. எஸ். நடராஜன்:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, கந்திலி ஒன்றியத்தில் பால் கூட்டுறவுச் சங்கம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) நாட்ராம்பள்ளி தொகுதி, கந்திலி ஒன்றியத்தில், பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் அமைக்கக் கோரி பொது மக்களிடமிருந்து